சார்பு நீதிமன்றம், பெருந்துறை

**OS.NO.**74/2021

2026-ம் ஆண்டு மார்ச் மாதம் 24ம் நாள் PW1 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969-ம் ஆண்டு 44வது சட்டம் பிரிவு 6(2)ன் படி திரு.அஷ்பக் அகமது, பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

நாள் : 24.03.2026

**Pw1 (நல்லசாமி)**

குறுக்கு விசாரணை ( 2ம் பிரதிவாதி தரப்பில்)

தாவா சொத்துக்கள் சுப்புராய கவுண்டருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரி. சுப்புராய கவுண்டரின் மனைவி பெயர் ஞாபகமில்லை. சுப்புராய கவுண்டருக்கு 2 மகள்கள், 1 மகன். அவர்கள் பெயர் நல்லாத்தாள், பழனியாத்தாள் மற்றும் பழனிசாமி. மூத்தவர் பெயர் நல்லாத்தாள். நல்லாத்தாளுக்கு எந்த ஆண்டு திருமணம் ஆனது என்றால் ஞாபகமில்லை. நல்லாத்தாளின் கணவர் பெயர் குமாரசாமி கவுண்டர். அவர்களுக்கு 2 மகள்கள் மற்றும் 2மகன்கள், அவர்கள் மணியம்மாள், பழனியாத்தாள், செல்லமுத்து (எ) செல்லக்குட்டி மற்றும் நல்லசிவம். குமாரசாமி கேஜி வலசை சேர்ந்தவர். அங்கு தான் அவர் குடியிருந்தார். பழனியாத்தாளின் கணவர் பெயர் பழனிசாமி, அவர் என் தகப்பனார். என் தகப்பனார் தச்சன்காட்டு வலசை சேர்ந்தவர். அங்கு தான் என் தகப்பனார் தாயாருடன் குடியிருந்தார். நானும் தற்போது அங்கு தான் குடியுள்ளேன். என் அம்மா 4.11.2020 ல் இறந்தார். என் தகப்பனார் இறந்த ஆண்டு எனக்கு ஞாபகமில்லை. நல்லாத்தாள் 14.6.2001 ல் இறந்தார் என்றால சரி. பழனிசாமி மனைவி பெயர் திங்களரசி. அவர்களுக்கு வேணுகுமார், ரவிசந்திரன் என்ற இரு மகன்கள். ரவிசந்திரன் திருமணம் ஆகி தற்போது அமெரிக்காவில் குடியிருக்கிறார். ரவிசந்திரன் தாயார் இறந்த பின் வரவில்லை என்றால சரி. வேணுகுமார் திருமணம் செய்து கொள்ளவில்லை. 2001 ம் ஆண்டு ரவிசந்திரன் பாகப்பிரிவினை கோரி தாக்கல் செய்த வழக்கின் வழக்குரையை நான் ஆவணமாக தாக்கல் செய்துள்ளேன். அந்த வழக்கில் என் தாயார் 7ம் பிரதிவாதியாக சேர்க்கப்பட்டுள்ளார் என்றால் சரிதான். அந்த வழக்கில் என் தாயாருக்கு அழைப்பாணை சார்வு செய்யப்பட்டு அவர் ஆஜராகாமல் ஒருதலைபட்சமாக்கப்பட்டார் என்றால் சரியல்ல. வாசாஆ 9

சுப்புராய கவுண்டர் சொத்துக்கள் தொடர்பாக 3 தாக்குகளில் சொத்து விவரங்கள் கண்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால சரி. வாசாஆ 9 ல் கண்டுள்ள சொத்துக்கள் சுப்புராய கவுண்டருக்கு பூர்வீக வகையிலும் கிரய வகையிலும் பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றால் சரிதான். நான் தற்போது தாக்கல் செய்துள்ள தாவாவில் வாசாஆ 9 ல் கண்டுள்ள செட்டியூல் பி ல் உள்ள 1 ம் இன சொத்தை மட்டும் தான் இந்த வழக்கில் தாவா சொத்தாக காண்பித்து அதில் 1/3 பாகம் பாகப்பிரிவினை கோருகிறேன் என்றால் சரிதான். சுப்புராய கவுண்டருக்கு பாத்தியப்பட்ட இதர சொத்துக்களை இந்த தாவாவில் சேர்க்கவில்லை என்றால சரிதான். வழக்கில் வேணுகுமார் தாக்கல் செய்த எதிர்வழக்குரையை தெரிந்து கொண்டேன். வாசாஆ 9 வழக்கில் சுப்புராய கவுண்டர் வேணுகுமாருக்கு ஒரு உயில் ஏற்படுத்தியதாக வேணுகுமார் எதிர்வழக்குரையில் சொல்லியுள்ளார் என்றால அது பற்றி எனக்கு தெரியாது. அந்த உயில் பற்றி என் தாயாருக்கே நன்கு தெரியும் என்றும் அதனால் தான் அந்த வழக்கில் என் தாயார் ஆஜர் ஆகி கட்சி செய்யவில்லை என்றால் சரியல்ல. சுப்புராய கவுண்டர் இறந்த பின் உயில் படி வேணுகுமாருக்கு உரிமை வந்து விட்டது என்றால் சரியல்ல. அந்த உயில் ஆவணத்தில் சுப்புராய கவுண்டர் அவரது மகன் பழனிசாமிமற்றும் மருமகள் திங்களரசிக்கு ஆயுட் பாத்தியம் வழங்கியும் அதன்பின்னிட்டு வேணுகுமாருக்கு சொத்து சேருவதாக கண்டுள்ளது என்றும், அதன் அடிப்படையில் பழனிசாமி மற்றும் திங்களரசி இறந்தபின் வேணுகுமாருக்கு சொத்துக்கள் பாத்தியப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்தை வேணுகுமார் தனித்து அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. 2001 ம் ஆண்டே அந்த சொத்து வேணுகுமாருக்கு பாத்தியப்பட்டதால் தான் அந்த வழக்கை நடத்தாமல் நடவடிக்கைகளை கைவிட்டுவிட்டார் என்றால் சரியல்ல. அந்த வழக்கில் என் தாயார் மற்றும் இந்த வழக்கின் இதர வாதிகள் தரப்பினர்கள் என்றால் சரிதான். அந்த உயிலை அன்றே ஒப்புக் கொண்டதால் தாவா சொத்து இன்றளவும் வேணுகுமார் அனுபவித்து வருகிறார் என்றால சரியல்ல. அதனால் தான் என் தாயார் இறக்கும் வரை தாவா சொத்தை பொறுத்து எவ்வித வழக்கும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வேணுகுமாருக்கு வாரிசுகள் யாரும் இல்லை என்பதால் சொத்தை அபகறிப்பதற்காக பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களை பொறுத்து ஏற்கனவே முன்வழக்கில் முடிவு

செய்யப்பட்டுவிட்டதால் இந்த தாவா நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வேணுகுமாரின் சொத்தை அபகறிப்பதற்காக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை

Dictated by me in Open court typed by Typist and read over to the witness and acknowledge by him/her to be correct.

M ASHFAQ AHAMED
Digitally signed by M ASHFAQ AHAMED
Date: 2026.03.24 16:41:40 -1000

Subordinate Judge,
Perundurai.

uploaded by SS